ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

पठन्त्येके शास्त्रं निगममपरे तत्परतया
यजन्त्यन्ये त्वां वै ददति च पदार्थांस्तव हितान् ।
अहं तु स्वामिंस्ते शरणमगमं संसृतिभयात्
यथा ते प्रीतिस्स्याद्धितकर तथा त्वं कुरु विभो ॥ स्तुतिसारस्तवे ।

ஹே ஈச சிலர் சாஸ்திரங்களைக்கற்கின்றார்கள். மற்றும் சிலர் வேதங்களை ஓதுகின்றார்கள். வேறுபலர் வேதங்களில் அதிக நம்பிக்கை கொண்டு அவைகளிற் கூறிய விதிகளுக்கிணங்க உமது திருப்தியின் பொருட்டு வேள்வியைச் செய்கின்றார்கள். பின்னும் அநேகர் உமக்குப் பிரியங்களான பல வஸ்துக்களை உம் பொருட்டு அர்ப்பணம் செய்கிறார்கள். ஹே! ஸ்வாமிந் மூடனான நான் இவ்வித நற்கர்மங்களில் ஒன்றையும் செய்யச்சக்தியற்றவனாய்க் கொண்டு கொடிய ஸம்ஸாரத்திலிருந்தும் பயந்து உமது திருவடிகளைச் சரணமாக அடைந்தேன். ஹே! விபோ! எல்லாமறிந்து எங்கும் வியாபகமாய் விளங்கும் பரம்பொருளாயும் அடிபணிந்தோரை அன்புடன் ஆதரிக்கும் கருணைவாய்ந்த ஹே! ஆதிமூலமே! என் விஷயத்தில் எவ்விதம் தங்களுக்குப் பிரீதிஏற்படுகின்றதோ அவ்விதம் செய்யவேண்டுமாய் வேண்டுகின்றேன்.

சாஸ்திரங்களில் பகவானை ஆராதித்து அவருடைய அனுக்கிரகத்தைப் பெறுவதற்குற்ற பல நெறிகள் அந்தந்த அதிகாரிக்குத்தக்கவாறு கூறப்பட்டிருப்பினும் அவவழிகளில் ஒன்றிலும் செல்வதற்கு யோக்கியதையில்லாத ஒருமூடாத்மா பகவானிடம் ஹே! ஸ்வாமிந் ஒன்றுமறியாத நான் உம்மைச் சரணமாக அடைந்தேன். உமதிஷ்டம்போல் நீர் எதைச்செய்தாலும் அதை நான் அனுபவிக்கத்தயாராயிருக்கிறேன் என்று பிரார்த்திக்கிறான். இதினால் விதிப்படி ஈசனை ஆராதிக்காவிட்டாலும் திருடமான பக்தியுடன் அவரைச்சரணமாக அடைந்தால் அவனையும் கைவிடாமல் பாதுகாப்பார் என்று அறிவிக்கப்படுகின்றது. சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஹே ராம! ஸாக்ஷாத் நாராயணஸ்வரூபியாய் நீ விளங்குகிறபடியால் உன்னிடத்தில் வினவுகின்றேன். உன்னுடைய மாயையினால் மோஹிதனான எனக்கு அற்பம் ஞானோபதேசத்தைச்செய்து எனது அக்ஞானத்தைப் போக்கவேண்டும்.

दारापत्यादिगेहेषु स्थिता नैवोपशाम्यति ।
तत्र पितुर्वचनं श्रुत्वा राजानं राघवोऽब्रवीत् ॥

பெண்டிர், புத்திரன் கிருகம் முதலானவைகளிலிருக்கும் அபிமானமானது அறபங்கூடக் குறைவையடையவில்லை என்று தமது அக்ஞானத்தை விபரமாய் அறிவிக்கும் பிதாவான தசரதருடைய இந்த வசனங்களைச் செவியுற்ற ஸ்ரீ ராகவன் ராஜாவான தசரதரிடம் கூறுகின்றார்.

श्रृणु राजन प्रवक्ष्यामि तव ज्ञानार्थमुत्तमम् ।
शृणोतु मम मातेयं कौसल्यापि पतिव्रता ॥

ஹே அரசனே; உமக்குச் சிறந்த அறிவேற்படவேண்டி என்னால் செய்யப்படும் உத்தமமான உபதேசத்தைக் கேளும், எனது அன்னையாயும் பதிவிரதையாயும் விளங்கும் இந்தக் கௌஸல்யையும் கேட்கட்டும்.

नश्वरं भासते चैतद्विश्वं मायोद्भवं नृप ।
यथाशुक्तौ रौप्यभासः मृगतोये जलस्पृहा ॥
यथा रज्जौ सर्पभासः काच भूम्यां जलस्य च ।
तद्वदात्मनि भासोऽयं कल्प्यते नश्वरो बुधैः ॥

ராகவன் உபதேசிக்கின்றார்.

ஹே அரசனே, உமக்கு உண்மையாகத் தோன்றும் இந்த ஜகத்தானது மாயையினால் உண்டுபண்ணப்பட்டது ஆகையால் அது நச்வரம்—நிலையற்றது; சீக்கிரம் நாசத்தையடையக்கூடியது. எனினும், அது தற்காலம் தங்களுக்குச் சத்ய வஸ்துபோல் விளங்குகின்றது. "உலகிலுள்ள சகல ஜனங்களுக்கும் பிரத்தியக்ஷானுபவத்தால் ஸத்தியமாகத் தோன்றும் இந்தஜகத்தை எப்படி அஸத்தியமென்று கூறமுடியும்" என்று.   (தொடரும்)

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

குரோதன-௵ ஐப்பசி-மீ ௨௰௨

ஸ்ரீராகவன் தசரதருக்குச் செய்த உபதேசம்.

एकदा राघवं राजा ज्ञात्वा मुद्गलवाक्यतः ।
वसिष्ठवाक्यतश्चापि चरित्रैश्चाप्यमानुषैः ॥
साक्षान्नारायणं विष्णुं मत्वाऽऽहूय रहः स्थितः ।
पप्रच्छ विनयेनैव हृदि भावं विधाय च ॥

ஒருசமயம் அயோத்தியாதிபதியான தசரதர் முத்கலர் என்கிற மஹரிஷியின் வாக்கியங்களாலும், தமது குலகுருவான வஸிஷ்டருடைய வசனங்களாலும், மானிடர்களால் அனுஷ்டிக்க வியலாத சிறந்த ஸ்ரீ ராமருடைய சரிதங்களாலும், ஸ்ரீ ராகவனை, "எங்கும் வியாபகமாய் விளங்கும் வைகுண்டவாஸியான ஸ்ரீமந் நாராயணரே இவ்வுருவாகப் பிரத்தியக்ஷத்தில் தோன்றியிருக்கிறார்" எனக்கருதித் தாம் ஏகாந்தமாக ரகஸ்யமான இடத்திலிருந்து கொண்டு, இவர் மூலமாகச் சிறந்த உபதேசத்தைப் பெற வேண்டுமென்று நினைத்து தமது புதல்வன் என்கிற எண்ணத்தை விட்டுப் பகவானே நமக்குக் குருவாயிருந்து உபதேசிக்க வந்திருக்கிறாரென்று மிகவும்வணக்கமாக அடியில்வருமாறு வினவினர்.

राम नारायणस्त्वं हि भूभारहरणाय च ।
जातो जातोऽसीति लोका वदन्त्यज्ञानबुद्धयः ॥

ஹே ராம! அதிகபாபிகளால் நிரம்பிய இந்த பூமியின் பாரத்தைக் குறைக்க வேண்டி வந்திருக்கும் வைகுண்டவாஸியான ஸ்ரீமந்நாராயணனே நீ ஆகிறாய். இந்த உண்மையை யறியாத சில அஜ்ஞானிகளான ஜனங்கள் உன்னை என்னுடைய புத்திரனாகச் சொல்லுகிறார்கள்.

अतः पृच्छामि ते राम मायया मोहितस्तव ।
किंचित् ज्ञानोपदेशेन नाशयाज्ञानजां मतिम् ॥

காஞ்சிபுரத்தின் மகிமை.

ஆரிய சிகாமணிகளே! சின்னாட்கட்கு முன்னால் என்னால் வரையப்பட்ட வியாஸத்தின்கீழ் இக்காஞ்சியின் மகிமையை அடுத்தெழுதுவதாய்ப் பரைசாற்றினேன். ஆயின் அக்காரியத்தை நிறைவேற வொட்டாது தடுத்து நிறுத்திய என் கன்ம விசேஷத்தைப்பற்றி முதலில் எழுதிப் பிறகு மஹிமையை விரிக்கலாமோவென மனதும் கையும் தூலிகையும் ஒன்றுக்கொன்று முறண்டு விழுகின்றன. இவ்விதமாயினும் இவைகளுக்குமேல் நியாயாதிபதியான பரம புருஷன் ஒருவன் எல்லா ஜந்து ஸாமான்யங்களுடைய இருதய கமலத்தில் வீற்றிருந்து கொண்டு அதனது சுக துக்கங்களைத் தன்னுடையதுபோல் பாவித்து அஞ்ஞர்களை அறியாமைக் கடலிலாழ்த்திக்கொண்டு இதுவும் தனது கிருத்யமல்லவென்று பரமார்த்த அறிவு ததும்பியவர்களை நம்பச்செய்து கொண்டு பிரகாசித்து வருகிறானென்பது ஸாதாரண அறிவாளர்களே அறியக்கூடியவிஷயம்தான். அத்தகையநியாயாதிபதி "உன்கன்மத்தை இங்கு விரிப்பது அழகல்ல. திவ்ய மகிமையையே புகழ்ந்து கூறு, அதுதான் உனது கடமை. அவ்வப்போது அனுபவிப்பது மட்டிலும் உன் கன்ம வசத்தால் நிகழ்வது யாவராலும் வெறுக்கத்தக்கதல்ல" வென்று கூறுவதாலும், தவறாது ஆர்யதர்மத்தில் விஷயத்தைத் தன் அற்பபுத்திக்கெட்டியவரை வெளியிட்டுக் கொண்டிருந்தவனும் இதுவரை வெகுகாலம் தடைபட்டு நின்றதை இனி விரிக்காது விஷயத்திலிறங்குவதே மகிமைதருமென்று கொண்டு பிரகிருதத்திலிறங்குவாம்.

இனி இக்காஞ்சியின் மகிமை என்றதனால் இதன் உண்மையான வைபவம் புராணங்களின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப் படப்போவதாய் எண்ணலாம். அவ்விதம் இல்லையென்பதை முதலிலேயே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில் ஒரு புராணத்தின் ஸாரத்தையும் சிறிதேனுமறியாத நான் அவ்வித மஹா மகிமையில் இறங்குவது ஸாஹஸகிருத்தியமாயும் பித்தன் பிதற்றலாயும் முடியுமாதலால் ஏதோ சிறிது காலத்திற்குமுன் லோகாசார்யர்களின் கட்டளையைச் சிரமேற்கொண்டு பகவத்பாதாசார்யர்க

ளின் ஜயந்தி மகோத்ஸவத்தை ஸேவிக்கச்சென்று சின்னாட்கள் அம்மகா க்ஷேத்திரத்தில் தாமதித்ததில் எனக்குத் தோன்றிய வைபவங்களைபபற்றி மட்டிலும்தெரிவித்தால் ஒருசமயம்முன்பின் ஆபாஸமான இவ்விஷயத்தைக் கண்ணுற்று ஆஸ்திக ஆரியதர்ம சிகாமணி யாரேனும் இப்பத்திரிகையிலேயே அதனுண்மையை நன்கு விரிக்கச்சமயம் நேருமென்பதே நான் இங்கு இறகேந்திய தற்கு முதற் காரணமென்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

இனி காஞ்சீயென்று பட்டணத்திற்குப்பெயர். இப்பெயர் ஸம்ஸ்கிருத பதம். இப்பட்டணத்தின் மகிமை பலவாற்றானும் மேலானது. முதலில் இப்பெயரே இதன் உயர்வைஉயர்த்துகிறது. பாருங்கள்! நம் பரதகண்டத்தில் இப்போதும் அநேகஸ்தல விசேஷங்கள் ஸம்ஸ்கிருதப் பெயராலமைக்கப் பெற்றிருப்பினும் இப் பெயர்போல் ஒருபாஷையிலும் மாறாமலே நிற்பது இதைத்தவிற வேறல்லவென்றே கூறலாம்.

अयोध्या मथुरा माया काशी काञ्ची अवन्तिका ।
पुरी द्वारवती चैव सप्तैते मोक्षदायकाः ॥

அயோத்தியை, மதுரை, மாயை, காசீ, காஞ்சீ, அவந்திகை, த்வாரகை என்று ஏழுபட்டணங்களும் (தியானம் செய்வதாலேயே) மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவை என்றபடி இவ்வேழுபட்டணங்களிலும் இப்பட்டணம் ஒன்றுதான் ஆங்கிலம் முதலிய பாஷைகளுக்குட்படாமல் ஈசனியற்றிய ஸ்வரூபத்துடன் விளங்கிக் கொண்டிருக்கிறதென்ப தொன்றேபோதும். இனி அடுத்திறங்குவாம்.

காஞ்சீயென்ற பதத்திற்குப் பொதுவாய் ஒட்டியாணம் என்றுபொருள். அதினின்றும் லக்கணத்தால் அவ்வாபரண மணியப்படும் அங்கமும் இப்பதத்தால் கூறப்படுவதுமுண்டு. ஆகவே ஒட்டியாண மணியப்படுமிடம் இடையெனப்படும். அதுவும் ஸ்திரீகளின் இடையையேகூறும். ஆதலால் காஞ்சீயென்றால் ஸ்திரீயின் இடையென்றாயிற்று. இங்கு ஸ்திரீ என்றால் பூமிதேவியே. அதனால் பூமிதேவியின் இடை. இவ்வாறு ஓர் அர்த்தம் கொண்டால் இங்கு இடையிலணியப்பெறும் ஒட்டியாணம் யாதெனச்

சங்கை நிகழ அதுவும் விசாரிக்கத்தக்கதே. ஒட்டியாணமும் அதன் நடுவில் அநேக விலை உயர்ந்த ரத்தினங்களும் அவைகளின் நடுவில் நடுநாயகமாய்ப் பார்ப்பவர்களின் கண்களைக்கவரத்தக்க, விலைமதிக்கமுடியாத ரத்தினமும் பிரகாசிப்பதுபோல் இக்காஞ்சியைச்சுற்றி நாற்புரமும் அநேக திவ்யக்ஷேத்திர ரத்தினங்களும் நடுநாயகம்போல் ஒளி வீசிக்கொண்டு தரிசிப்பவர்களின் கண்ணையும் மனதையும் கவர்ந்துகொண்டு உள்ளிருக்கும் அஞ்ஞான இருளையும் அகற்றிக் கொண்டு அளவிலாச் சுடர்போல் பிரகாசித்து விளங்கும் ஸ்ரீ காமாக்ஷியின் திவ்யஸான்னித்யமும் விளங்குகின்றது. இவ்வபிப்பிராயத்தை ஸ்ரீ மூகாசார்யர்கள் வெளியிடுகின்றனர்.

ऐश्वर्यमिन्दुमौलेः ऐकात्म्यप्रकृति काञ्चिमध्यगतम् ।
ऐन्दवकिशोरशेखरमैदंपर्यं चकास्ति निगमानाम् ॥

"சந்திரசேகரரின் ஐசுவரியமாம். ஒற்றுமையின் மூலமாம். காஞ்சியின் மத்தியிலிருப்பதாம். சந்திரகலையைத் தலையில் தரித்ததாம். வேதங்களின் முக்கிய தாத்பரியமாம், பிரகாசித்துக் கொண்டிருக்கிறதென்று" காஞ்சியின் மத்தியிலிருக்கிறதென்பதையும் சொல்லவொண்ணச் சுடரென்றும் கூறினர். ஆகவே இப்பட்டணத்தைக் காஞ்சியென்பதும் ஒட்டியாணமென்றும் அதன் மத்தியில் திவ்ய ரத்னமென்றும் சொல்வதெல்லாம் தகும்.

மற்றும் காஞ்சியென்றல் ஒட்டியாணம் தரிக்கும் இடையென்றும் கொள்ளலாம் ஆகவே ஸ்திரீகளின் இடையென்றுயிற்று. ஸ்திரீகளின் இடையைக் கவிகள்யாவரும் காணத்தகாததென்றும் ஆகாயமென்றும் கூறுவதுண்டு. அவ்வழியிலும் இக் காஞ்சீ க்ஷேத்திரம் ஒக்கும். ஏனெனில்

मध्यं तनुत्वादविभाव्यमानमाकाशमासीदसितायताक्ष्याः ।

இடைமிகசூக்ஷ்மமாய் இருப்பதால் ஊகிக்க ஒண்ணுதஆகாயமாய் இருந்தது. என்பதுபோல் இக்காஞ்சியும் யோகிகளாலும் அறியத்தகாத ஆகாயரூபமென்றும் சொல்வதுண்டு. ஆதல்பற்றியே இங்கு நடுநாயகமாய்விளங்கும் பராசக்தியை 'பிலாகாசஸ்வரூபிணி'

என்றும் சொல்வார்கள். மற்றும் இடையென்பதை மத்தியம் என்றுகொண்டால் இக்காஞ்சியும் இப்பூமண்டலத்திற்கு மத்தியப் பிரதேசம்தானென்றும்மகரிஷிகளேஸாதித்திருக்கின்றனர் ஆகவே

देव्या यस्या वसनमुदधिःपीठिका हाटकाद्रिः ।
हारस्सिन्धुस्सगरतनय स्वर्गमार्गैकबन्धुः
सीतामातुर्जगति मिथिलां सूतिकागेहमाहुः ॥

பூமியென்ற தேவிக்கு வஸ்திரம் ஸமுத்திரமென்றும் ஹாரம் கங்கையென்றும் பிரஸவ அறையை மிதிலா பட்டணம் என்றும் ஸீதை பிறந்ததைப்பற்றி போஜகவிவர்ணித்தபடி அண்டங்களுக்கெல்லாம் ஆதிமூலமான பராசக்திக்கு பூமத்தியம் ஸ்தானமென்பதும் மகாமேரு பீடமென்பதும் புராணப் பிரஸித்தமே. அதற்கிணங்கவே பூமத்தியஸ்தானமான இக்காஞ்சியே பராசக்தியின் பரமப் பிரேமஸ்தான மென்றும் இங்கும் மேருகுஹாவாஸினிதானென்பதும் மிகப் பிரஸித்தம். இங்கு இவ்வளவுதூரம் சொல்ல நேர்ந்ததின் ஸாரம் இதுவே. இம்மகாக்ஷேத்திரம் பராசக்திக்குத்தான் பரமாதிஷ்டானமென்பது இனித்தான் விளங்கும். ஆதிகாலத்தில் இந்த க்ஷேத்திரத்தை முதலிலறியாது பூமண்டலம் முழுதும்சுற்றி மனதுசற்று மாறாமலும் இன்னது செய்யவேண்டுமென்றும் இதற்காக உலகிற்சுற்றுகிறேமென்றறியாமலும் நாம் இன்னசெய்யப் போகிறேமென்று தோன்றாதவருமான மகரிஷிசிரேஷ்டர் துர்வாஸரென்பவர் யாரைக் கண்டாலும் வெறிகொண்டவர்போல் கோபிப்பதும் சபிப்பதுமாய் கோபாக்னியைக் கக்கிக் கொண்டிருந்தும் கண்டவர்கள் மனது நடுங்க சபிப்பவராயும் உலகிற் சஞ்சரித்துக்கொண்டிருந்தனர். ஆயினும் சாபத்தால் எம்மகருஷிக்கும் தவத்தின் சக்தி குன்றிவிடுவதற்கு விரோதமாய் அன்னவர்க்கு வளர்ந்துகொண்டிருந்ததற்கும் காரணம் யாதெனச் சற்று நிதானித்துப் பார்க்கவேண்டியது நமக்கு அவசியம். இம்மகான் எப்போதும் பராசக்தியையே ஆராதனம்செய்யும் மகிமை வாய்ந்தவர். ஆகவே பராசக்தியின் அநுக்கிரகம் ஒருநாளும் எவ்விதத்தாலும் குன்றாதென்பதைக் காட்டவே இம் மகான் கோபாக்னியைக் கக்கிக்கொண்டும் தவம் குன்றவில்லையென்றும்,

ஸ்ரீதேவியின் அநுக்கிரகம் பெற்றவன் யாவருக்கும் மேலானவன் என்றும், அவனது சாபமோ அநுக்கிரகமோ எப்போதும் அமோகமென்றும், பூவுலகிற்காட்டியும்விண்ணுலகம்சென்று இந்திரனேயும் அவனது ஐராவதத்தையும் சபித்து வந்தும் ஈசுவரியின் மகிமையையே வெளியேற்றினர். இம்மகான் கடைசியாய் இக்காஞ்சியில் பராசக்தியைத் தியானித்து ஸமாதியிலிருந்தனர் என்று கூறுகின்றனர். பிறகு நமது அத்வைதமதப் பிரதிஷ்டாபகரான பகவத்பாதாசார்யஸ்வாமிகளவர்கள் தாங்கள் எண்ணின காரியத்தைச்செவ்வனேமுடித்து நான்குதிக்குகளிலும் மடங்களை நியமித்து, அவைகளில் முக்கிய சிஷ்யர்களை அமர்த்தி, துர்மதங்கள் நம் நாடெங்கும் பரவாமலிருக்கவும், ஸன்மதம் ஓங்கவும் ஆக்ஞாபித்துக் காஞ்சிக்குச் சென்றனர். அங்கு லோகமாதாவின் ஆடம்பரவைபவத்தைக் கண்டு இதுவே பரமமுக்திக்ஷேத்திரம் என்றும் ஸித்திக்ஷேத்திரமென்றும் உலகத்தாரறியுமாறு அம்மணியின் சக்தியை காமகோடி என்ற ஸ்ரீசக்ரத்தில் விசேஷமாய் ஆராதித்துத் தமது ஆத்மஸ்தானமாய் அதைப்பாவித்து அதைப் பரம்பரையாய் ஆராதிக்குமாறு தகுந்த பரம்பரையை ஏற்படுத்த ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது, தாம்ரபர்ணீநதிதீரத்திலிருந்து அவ்விடம்வந்த அனேகஆஸ்திகபண்டிதோத்தமர்களுடன் கூடவந்த 6-வயதுள்ள ஸர்வக்ஞன் என்ற பையன் தன்னேடு சின்னுட்கள் விசித்திரமாயும் யாவரும் பிரமிக்கத்தக்கவாறும் சாஸ்திரவாதம் செய்வதற்குத் தகுந்த பதிலளித்துப் பிறகு ஸன்யாஸத்தை விரும்பிய அப்பையனுக்கு முறைப்படி ஸன்யாஸத்தைக்கொடுத்து அவரையே தமது முதல் பரம்பரையாக ஏற்படுத்தினர் என்பது நமது சங்கரவிஜயத்தில் பிரஸித்தம். இதிருக்கட்டும். ஆகவே நம் இம்மகான் இந்த காஞ்சியில் அதுகாறும் அரூபமாய் பிலாகாசஸ்வரூபிணியாய் இருந்த பராசக்தியை ஸரூபிணியாய்ச் செய்தனர்என்றும் சொல்லுகின்றனர். அதனலேயே நம் பகவத்பாதாசார்யர்களுக்கு காமகோடி பீடாதிபதி என்றும் பெயர் வழங்கலாயிற்று.

कामेश्वराह्लादकरी कामेश्वरमहेश्वरी ।
कामेश्वरी कामकोटिनिलया कांक्षितार्थदा ॥

என்ற லலிதாத்ரிசதியில் ஆசார்யரவர்கள் 'காமகோடிநிலயா' என்பதற்கு

षण्णवतिपीठेषु मध्ये कामकोटिः श्रीचक्रमित्यर्थः ।

96 பீடங்களின் மத்தியில் காமகோடியென்றால் ஸ்ரீசக்கிரம்என்று அர்த்தமென்றார்கள். இனி 96 பீடமென்பது எதுவென்றும் அதன் மத்தியெதென்றும் மகான்கள்தான் அறியக்கூடும். இவ்விதம் காமகோடிவாஸியான பரதேவதை வெகுகாலம் வ்யக்தமாகாமலிருந்ததை நமது பரமாசார்யர்கள்தான் பிரகாசப்படுத்தினர். அவ்விதம் பிரகாசப்படுத்த பூமத்தியஸ்தானமென்ற காஞ்சியே முக்கியமாயிற்று. कांक्षितार्थदा இஷ்டமான பொருளைக் கொடுப்பவள் என்றிருப்பதால்தான் ஸ்ரீசக்ரவாஸப்ரியையான மகா சக்தியை நம் பரமாசார்யாள் மேருசக்கிரமான ஸ்ரீசக்கிரத்திலும் பிரதிஷ்டை செய்துகொண்டு தனதுநித்தியாராதனத்தில் வைத்துக் கொண்டுதனது பக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்து வந்தனர். ஆதல்பற்றியே நமது ஆசார்யபரம்பரையில் ஏற்பட்டலோகாசார்யர்களும் இப்போது தமது யாத்திரையிலும் வைத்துக் கொண்டு சந்திரமௌளீசுவரரோடு திரிபுரஸுந்தரியையும் ஆராதித்துக்கொண்டு உண்மையான பக்தர்களின் மனோரதத்தை இப்போதும் பூர்த்தி செய்துகொண்டு விஜயயாத்திரையில் பிரசாசிக்கின்றனர். இவ்விதம்லோகாநுக்கிரகத்தில் பரமதீக்ஷைகொண்ட நம் பரமாசார்யாள் இக்காஞ்சியையே தனக்கு வாஸஸ்தலமாயும் ஆக்கிக்கொண்டனர். இத்தகையகாஞ்சியில் லோகமாதாவுக்கேற்பட்டிருக்கும் ஆலய விமரிசையை என்னென்றுரைப்பது. நம் பரமாசார்யாள் ஸ்ரீ மாதாவுக்கு திவ்யாலயத்தை மந்திரஸ்வரூபமாகவே நிர்மாணஞ்செய்திருக்கின்றனர். அதாவது கோயில் பிரணவாகாரமாகவே இருக்கிறது. இவ்விதம் கோயில் புவியில் ஓரிடத்திலுமில்லையென்பதைத் தரிசித்தயாவருமறிவர். அம்பாளின் ஸன்னிதிக்கு நேராய் வாசலில்லை. வெகு சிரமப்பட்டு ஹிருதய குகையில் யோகிகள் தரிசித்துக்களிக்கும் உபநிஷத் பிரதிபாத்யையான அத்யாத்மவித்யை இதுதான் என்று கோவிலைப் பார்க்கும்போதே தோன்றும். ஹிருதபகுகைபோல் சிறிதான அவ்விடத்தில் பராசக்தியும் அதைச் சுற்றி ஸமஸ்த தேவதைகளும் ஒரு

புறம் லக்ஷ்மியும் மற்றோர்புறம் விஷ்ணுவும் இவ்விதமெல்லாம்பிர திஷ்டை செய்திருப்பதைப்பற்றி நம் ஆசார்யவைபவத்தை என் னென்றுரைப்பது. இம்மட்டா? இக்காஞ்சியிலிருக்கும் மற்ற தே வதைகளின் ஸமஸ்த ஆலயங்களும் லோகமாதாவைப் பார்த்தே நிற்கிறது. ஸமஸ்த தேவதையின் உத்ஸவத்திலும் அம்பாள் ஆல யத்தையே சுற்றிப்போவதுதான் விசேஷமென்பதை முன்னமே கூறிவிட்டேன். உள்பிராகாரத்தில் ஸ்ரீ பகவத்பாதாசார்ய ஸமா திபிஷ்டாபிம்பமும் அவர்களுக்கெதிரில் துர்வாஸ மகரிஷியின்விக் ரகமும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதையும் இவைகளின்மகிமையை நான் என்னென்றுரைப்பது. இதைப்பற்றி அவசியம் தெரிந்த மகான் இன்னும் விவரித்து வரைந்தால் என்போன்றவர்களின் மனதுக்கு மிக ஆறுதலேற்படும். ஆகவே ஆரிய சிகாமணிகளே! ஜன்மமெடுத்த நாம் யாராயினும் சரி, இக்காஞ்சியை ஒருதரம் தரிசித்தால் அந்த க்ஷேத்திரத்தின் மகிமை உபதேசிக்கப்படா மலே விளங்கிவிடுமென்பது எனது நிச்சயமென்பதை வணக்கத் துடன் தெரிவித்துக்கொள்கிறேன். சுபம்!

M. N. சுப்பிரமணிய சாஸ்திரீ.

ஸ்ரீ மத்வாசார்ய பாஷ்ய ஸித்தாந்தம்.

(௯௧௯-வது பக்கத்தொடர்ச்சி)

17 ஸ்திரீகளுக்கு வேதாதிகாரமுண்டா? அவர்கள் எப்படி முக்தியைப் பெறுவது?

தேவஸ்திரீகளுக்கும் ரிஷிபார்யைகளுக்கும் வேதாதிகார முண்டு (ஊர்வசி, சியாமளா, சசி முதலியோர்)

आहुरप्युत्तमस्त्रीणामधिकारं तु वैदिके ।
यथोर्वशी यमी चैव शच्याद्याश्च तथापराः ॥

வியோம ஸம்ஹிதை.

மற்ற ஸ்திரீகள் புராண சிரவணத்தாலும் பதி சுச்ரூஷையா லும் ஞானமடைந்து மோக்ஷமடையலாம். (1—1—1.)

18 எல்லா வேதாதிகாரிகளும் அபரோக்ஷ ஞானமடைவார் களா?

அடையமாட்டார்கள். முக்தியோக்யர்களுக்குத்தான்பகவத பரோக்ஷமுண்டாகும். நித்யஸம்ஸாரிகள் என்ற ஓர் வகுப்பினர் நித்யம் ஸம்ஸாரத்திலேயே சுற்றிக்கொண்டிருப்பார்கள். தமோ யோக்யர்கள் என்ற மற்றோர் வகுப்பினருக்கு ஒருகாலும் அப ரோக்ஷம் ஏற்படுவதில்லை. அவர்கள் நற்காரியங்களில் ஒருபோ தும் பிரவர்த்திக்கிறதில்லை. பிரவர்த்தித்தாலும் அவர்களுக்கு ஞானம் ஏற்படுவதில்லை. எப்போதும் நித்ய நரகத்தில் வாசம் செய்பவர். (3—4—34 35, 36, 37, 38, 40.)

19 மேற்கூறியபடி ஒருவகுப்பினரை எப்போதும் நரகத்தை யநுபவிக்கச் செய்வது பக்ஷபாதமற்ற கடவுளுக்கு அழ காகுமா ?

அவ்விஷயத்தில் ஜீவர்களின் இயற்கையே (Nature) கார ணமாயிருக்க அவ்வியற்கையை அநுஸரிக்கப் பிரதிக்ஞை செய்தி ருக்கும் கருணைக்கடலான கடவுள் என் செய்வார்? வேப்பம் பழம் இயற்கையாகக் கசப்பாயும் மாம்பழம் இனிப்பாயும் உள் ளன. இவைகளின் ருசி என்றும் மாறுவதுமன்று. பழங்களில் ஓர் வகுப்பான வேப்பம்பழத்தை என்றைக்கும் கசப்பாகவே வைத்திருக்கிறார் என்று கடவுளைக் குறைகூறலாமா ?

20 கர்மானுஷ்டானத்தினால் என்ன பிரயோஜனம் ?

கர்மம் இருவகைப்படும். 1. காம்யம். 2. அகாம்யம். காம் யம் ஐஹிகப்பலனைத்தருகிறது. அகாம்யம் முதலில் அபரோக்ஷ ஞானத்தை யுண்டுபண்ணுகிறது. பிறகு மோக்ஷத்தில் விசேஷப் பலனைத்தருகிறது. இவ்விதம் மோக்ஷமடைந்த பிறகும் யதேச் சையாய் கர்மங்களைச் செய்யவேண்டும். இல்லையேல் மோக்ஷா னந்தத்தில் குறைவு ஏற்படும். (3—1—7; 3—4—19, 33)

21 கர்மானுஷ்டானத்தில் நமக்கும் தேவர்களுக்கும் என்ன வேற்றுமை ?

மானிடர்களாகிய நாம் விதியின்படியே செய்யவேண்டும். தேவதைகள், அனுஷ்டிக்கவேண்டிய கர்மங்களினிடையே எவை களையேனும் தம்மிச்சைப்படி செய்யலாம். பிரஹ்மதேவரோ தம் மிஷ்டப்பிரகாரம் செய்யலாம். அவருடைய இச்சைதான் விதி. (3—4—22, 23, 24.)

22 மோக்ஷத்தில் முக்தன் பரமாத்மாவின் பரமஸாம்யத்தைய டைகிருனு? இல்லையா?

இல்லை. அங்கேயும் ஆநந்ததாரதம்யம் உண்டு. அவரவர் களின் யோக்யதைக்குத் தக்கவாறு படிப்படியான சுகாநுபவம் தான் உண்டு. பகவானே ஒப்பற்ற சுகமுடையோன். (3–3–33)

23 பகவானுடைய அபரோக்ஷஞானத்தினுல் மோக்ஷம் கிடைக்கும் என்று முன் கூறப்பட்டது. இராமகிருஷ்ணுதி அவதாரங்களில் அவர்களை நேரிலேயே தரிசித்தவர்களுக்கு மோக்ஷம் கிடைத்ததா?

அவர்கள் உத்தம லோகங்களை யடைந்தார்களே யொழிய மோக்ஷத்தைப்பெறவில்லை. ஏனெனின் ஹிருதயகமலத்தில் வீற்றிருக்கும் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரித்தால்தான் மோக்ஷம் கிடைக்கும். (3—3—53)

भगवान् बिंबदर्शनेनैनं मोचयति ।

நியாயவிவரணம்.

24 அபரோக்ஷ ஞானம் உண்டானவுடனேயே விஷ்ணு லோகமடைந்து விடுகிருனு?

பிராரப்த கர்மம் இல்லாதிருப்பின் உடனே மோக்ஷமடைவான். பிராரப்த கர்மம் இருந்தால் அதையனுபவித்த பிறகே தான். (3—4—51)

25 பிராரப்த கர்மமிருக்கும்போதே எப்படி அபரோக்ஷ ஞானமுண்டாகும்?

பிராரப்த கர்மமிருந்தால் அபரோக்ஷக்ஞனம் உண்டாகாதென்கிற நியாயமில்லை. ஆனுல், அபரோக்ஷத்தைத் தடுக்கும் பிராரப்த கர்மமும் உண்டு. அவ்வித கர்மம் இருந்தால்தான் அபரோக்ஷம் ஏற்படாது. (3—4—50.)

26 அபரோக்ஷத்திற்குப் பிறகு முன் செய்யப்பட்ட கர்மங்களின் கதி என்ன?

புண்ய கர்மமாயின் ஞானியின் அந்தஜன்மத்திய சிநேஹிதர்களையும், பாபகர்மமாயின் அவனுடைய துவேஷிகளையும் சேரு

கிறது. (இதனால்தான் ஒருவரையும் த்வேஷிக்கலாகாது என ஆன்றோர் கூறுகின்றனர்போலும்) (4—1—17.)

27 ஜீவர்கள் எந்தமார்க்கத்தினால் விஷ்ணுலோகம் போகின்றனர்

ஞானிகளான ஜீவர்கள் அர்ச்சிராதி மார்க்கத்தால் முதலில் ஆதிவாஹிகவாயு லோகத்தை அடைகின்றனர். அங்கிருந்துதடில் லோகம்போய் அங்கிருந்து வாயுலோகமடைந்து அங்கிருந்து பிரஹ்மாவோடுகூட விஷ்ணுலோகம் போய்ச் சேருகின்றனர். தேவதைகளும் ரிஷிகளும் கந்தர்வர்களும் மற்றும் சிலரும் தங்களைக் காட்டிலும் உத்தம தேகங்களில் லயமடைந்து அந்தத்தேகங்களினால் மோக்ஷமடைகின்றனர். இவர்களனைவருக்கும் புனராவிருத்தி இல்லை. (4—2—2, 3, 4, 6, 15; 4—3—1, 5 10, 15.)

புண்ய கர்மிகளான ஜீவர்கள், தூமாதிமார்க்கத்தினால் சந்திரலோகமடைந்து அங்குச் சுகங்களையனுபவித்துக் கர்மத்தின் சேஷத்தால் இவ்வுலகிற் பிறக்கிறார்கள். பாபகர்மிகள் திர்யக் யோனிகளையோ நரகங்களையோ அடைந்து அங்குத்துக்கத்தை அனுபவிக்கின்றனர். சில ஜீவர்கள் தமஸ்ஸில் விழுகின்றனர். (தமஸ் என்பது நித்ய நரகம். அதில் தள்ளப்பட்டவன் மீண்டும் வெளிவருவதில்லை.) 3—1—8, 9, 14, 18.)

गच्छन्ति पापिनः सर्वे नरकं नात्र संशयः ।
तत्र भुक्त्वा पतन्त्येव .... ॥

28 நரகங்களில் அனேக விதங்களுண்டா ?

உண்டு. முக்கிய நரகங்கள் மொத்தம் ஏழு. அவைகளில் இரண்டு நித்யமானவை. ஐந்து அநித்யமானவை. நித்ய நரகத்தில் விழுந்தவன் மறுபடியும் எழுந்திருப்பதில்லை. (3-1-14, 16.)

மகாபாரதம்:—

रौरवोऽथ महांश्चैव वह्निर्वैतरणी तथा ।
कुम्भीपाक इति प्रोक्तान्यनित्यनरकाणि च ॥
तामिस्रश्चान्धतामिस्रौ द्वौ नित्यौ संप्रकीर्तितौ ।
इति सप्त प्रधानानि बलीयस्तूत्तरोत्तरम् ॥

ரௌரவம், மஹாரௌரவம், அக்நி, வைதரணீ, கும்பீபாகம் ஆக ஐந்தும் அநித்ய நரகங்கள். தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம் ஆக இரண்டும் நித்ய மானவையாம். பாகவதம் முதலிய கிரந்தங்களில் பல நரகங்கள் கூறப்பட்டிருக்கின்றனவே எனின் இவ்வேழும் முக்யமானவை इति सप्त प्रधानानि என்று அர்த்தம். இவைகளில் பின் சொல்லப்பட்டவை முற் கூறப்பட்டவைகளைக்காட்டிலும் பலிஷ்டமானவை. அதாவது அதிக துக்கத்தைக் கொடுப்பவை என்றபடி.

महातमसि मग्नानां न तेषामुत्थितिः क्वचित् ॥ नैवेत उत्तिष्ठन्ति ।

(கௌண்டரவ்ய சுருதி) மகாதமஸ்ஸில் மூழ்கினவர்கள் ஒருபோதும் எழுந்திருப்பதில்லை.

29 விஷ்ணுவை உபாஸிக்கும் பிரகாரம் யாது ?

'நாம் விஷ்ணுவின் தாஸர்கள்' என்று உபாஸிக்க வேண்டும். விஷ்ணுவின் எண்ணிறந்த குணங்களில் ஸத்யம், ஞானம், ஆனந்தம், குணபூர்ணத்வம். ஆகிய நான்கு குணங்களினால் மானிடர்கள் உபாஸிக்க வேண்டும். தேவதைகள் தத்தம் யோக்யதைக்கேற்றவாறு ஏககாலத்தில் எத்தனை குணங்கள் ஸ்புரிக்கின்றனவோ அவைகளினால் உபாஸிக்க வேண்டும். பிரஹ்மா எல்லா குணங்களாலும் உபாஸிக்கலாம். (3-3-10, 12, 16, 18; 4-1-3.)

गुणैस्सर्वैरुपास्योऽसौ ब्रह्मणा परमेश्वरः ।
अन्यैर्यथाक्रमं चैव मानुषैः कैश्चिदेव हि ॥

பவிஷ்யத்பர்வம்.

सच्चिदानन्द आत्मेति मानुषैस्तु सुरेश्वरैः ।
यथाक्रमं बहुगुणैः ब्रह्मणात्वखिलैर्गुणैः ॥

அணுபாஷ்யம்.

30 யார் யார் எங்கெந்த அதிஷ்டானங்களில் விஷ்ணுவை உபாஸிக்கவேண்டும் ?

अग्नौ क्रियावतां विष्णुः योगिनां हृदये हरिः ।
प्रतिमास्वप्रबुद्धानां सर्वत्र विदितात्मनाम् ॥ इति ब्राह्मे ।

யக்ஞம் முதலிய கிரியைகளை அனுஷ்டிப்பவர்கள், கார்ஹபத்யம் ஆஹவனீயம், தக்ஷிணாக்நி ஆகிய அக்நிகளில் விஷ்ணுவை உபாஸிக்க வேண்டும். ரிஷிகள் ஹிருதயத்தில் உபாஸிக்க வேண்டும். மந்த மதிகளான மனுஷ்யோத்தமர்கள் கிருஷ்ணர், இராமர் முதலிய விக்ரஹங்களில் உபாஸிக்க வேண்டும். விசேஷமான ஞானமடைந்தவர்கள் (தேவதைகள்) எல்லா இடங்களிலும் உபாஸிக்க வேண்டும். பஹிருபாஸிகளும் சிறிது அந்தருபாஸனையையும் செய்யவேண்டும். (1—1—31.)

31 லக்ஷ்மீ நித்ய முக்தள் அல்லவா! அவளுக்கும் உபாஸனை அவசியமா?

அவளும் பக்தி விசேஷத்தால் யதேச்சையாய்ப் பகவானை உபாஸிக்கிறாள். விஷ்ணுவைவிடப் பன்மடங்கு தாழ்ந்தவள்.

மத்வவிஜயம்:—

न रमापि पदांगुलीलसन्नखधूराजदनन्तसद्गुणान् ।
गणयेद्गणयन्त्यनारतं परमान्कोऽस्य परो गुणान्वदेत् ॥

லக்ஷ்மியானவள் பரமாத்மாவின் கால்விரல் நகத்தில் ஸம்பந்தமான தூளியின் குணங்களை இடைவிடாது கணக்கிட்டும் எண்ணக்கூடவில்லை. அப்படியிருக்க இவருடைய உத்தமகுணங்களனைத்தையும் யார்தான் கணக்கிடமுடியும்!

32 ஸ்ரீமன் மத்வாசாரியார் யாருடைய அவதாரம்? எங்கு அவதரித்தார்?

இவர் வாயு பகவானின் மூன்றாவது அவதாரம்.

प्रथमो हनुमान्नाम द्वितीयो भीम एव च ।
पूर्णप्रज्ञस्तृतीयस्तु भगवत्कार्यसाधकः ॥

இவருக்கு, வாஸுதேவர் என்பது முதற்பெயர். பிறகு ஆநந்த தீர்த்தர், பூர்ணப்ரக்ஞர், மத்வர் என்ற பல நாமாந்தரங்களும் ஏற்பட்டன. இவர் உடுப்பிக்கு அருகிலுள்ள பாஜக க்ஷேத்திரத்தில் அவதரித்தனர்.

ग्रन्थान्मध्वश्चकारासौ सप्तत्रिंशदमन्दधीः ।

என்றபடி இவர் இக்கொடிய ஸம்ஸாரத்தினின்று விடுபட்டு சாசுவதமான மோக்ஷ ஸுகத்தைப் பெறுவதற்கு இன்றியமையாத முப்பத்தேழு அரிய நூல்களை இயற்றிப் பேருபகாரம் செய்திருக்கின்றனர்.

ஸ்ரீமத்வரின் 37 நூல்களாவன.

கீதாபாஷ்யம், பிரஹ்ம ஸூத்ரபாஷ்யம், அணுபாஷ்யம், அணுவியாக்யானம், பிரமாணலக்ஷணம், கதாலக்ஷணம், உபாதி கண்டனம், மாயாவாதகண்டனம், மித்யாத்வானுமானகண்டனம், தத்வஸங்க்யானம், தத்வ விவேகம், தத்வோத்யோதம், கர்மநிர்ணயம், விஷ்ணுதத்வ நிர்ணயம். ருக்பாஷ்யம், தசோபநிஷத் பாஷ்யங்கள். (10) கீதாதாத்பர்யம், நியாயவிவிருதி, நகஸ்தோத்திரம், யமக பாரதம், துவாதசஸ்தோத்ரம், கிருஷ்ணாமிருத மஹார்ணவம், தந்திரஸாரம், ஸதாசார ஸ்மிருதி, பாகவத தாத்பர்யம், பாரததாத்பர்யநிர்ணயம், யதிப்ரணவகல்பம், ஜயந்தி நிர்ணயம்.

முடிவுரை.

महाजनो येन गतः स पन्थाः என்றபடி பெரியோர்கள் போன மார்க்கத்தையே நாமும் பின்பற்ற வேண்டும். பெரியோர்கள் யாவர்எனின், யாரையார் பூஜ்யர் என்று கருதுகின்றனரோ அவர் தாம் அவருக்குப் பெரியோர். சுபம்.

M. ராம ராவ்.
ஸ்ரீ மாத்வஸபையின் காரியதரிசி,
கும்பகோணம்.